**அரசுத் தேர்வுகள் இயக்ககம்,சென்னை– 600006**

**மேல்நிலை முதலாமாண்டு பொதுத்தேர்வு – மார்ச் / ஏப்ரல் 2023**

**வரலாறு விடைக்குறிப்புகள்**

**குறிப்பு :** 1. நீலம் அல்லது கருப்பு மையினால் எழுதப்பட்டுள்ள விடைகள் மட்டுமே மதிப்பீடு செய்யப்பட வேண்டும் .

2. பகுதி – 1 ல் கொடுக்கப்பட்டுள்ள நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினை தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதப்பட்டிருக்க வேண்டும்.

**பகுதி – I** **மொத்த மதிப்பெண்கள் : 90**

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** **20 ×1 = 20**

**சரியானை விடையை தேர்ந்தெடுத்து எழுதுக.**

| வினா எண். | விடைக் குறியீடு | A வகை | வினா எண். | விடைக் குறியீடு | B வகை | மதிப் பெண் |
|---|---|---|---|---|---|---|
| 1. | ஈ | காந்தாரக்கலை | 1. | ஆ | பன்றி | 1 |
| 2. | ஆ | பன்றி | 2. | ஈ | 17 | 1 |
| 3. | இ | கம்போடியா | 3. | ஆ | கோவா | 1 |
| 4. | ஆ | பழங்கற்காலம் | 4. | அ | கொற்கை | 1 |
| 5. | ஈ | 17 | 5. | ஆ | பழங்கற்காலம் | 1 |
| 6. | ஆ | ஆந்திரா – கர்நாடகா | 6. | ஆ | மராத்தியர் | 1 |
| 7. | ஆ | கோவா | 7. | ஈ | மாறவர்மன் அரிகேசரி | 1 |
| 8. | ஆ | மினாண்டர் | 8. | இ | கம்போடியா | 1 |
| 9. | ஆ | கொற்கை | 9. | ஆ | 1– iv. 2 – iii, 3 – i, 4 – ii | 1 |
| 10. | ஆ | 28 கி.கி | 10. | இ | கூற்று சரி, காரணம் தவறு | 1 |
| 11. | ஆ | கிரகவர்மன் | 11. | ஈ | காந்தாரக்கலை | 1 |
| 12. | ஈ | அமெரிக்க ஐக்கிய நாடுகள் | 12. | ஆ | அர்த்தசாஸ்திரம் | 1 |
| 13. | ஆ | 1– iv. 2– iii, 3– i, 4 – ii | 13. | ஆ | 28 கி.கி | 1 |
| 14. | ஈ | மாறவர்மன் அரிகேசரி | 14. | ஈ | வில்லியம் ஸ்லீமேன் | 1 |
| 15. | ஆ | மராத்தியர் | 15. | ஆ | இரும்பு | 1 |
| 16. | ஈ | வில்லியம் ஸ்லீமேன் | 16. | இ | வேலூர் | 1 |
| 17. | ஆ | அர்த்தசாஸ்திரம் | 17. | ஆ | கிரகவர்மன் | 1 |
| 18. | இ | வேலூர் | 18. | அ | மினாண்டர் | 1 |
| 19. | ஆ | இரும்பு | 19. | ஈ | அமெரிக்க ஐக்கிய நாடுகள் | 1 |
| 20. | இ | கூற்று சரி, காரணம் தவறு | 20. | ஆ | ஆந்திரா – கர்நாடகா | 1 |

www.Padasalai.Net



Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

பகுதி - II 7× 2 = 14

| எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 30 - க்கு கட்டாயமாக விடையளிக்கவும் | | |
|---|---|---|
| 21 | • தொல்லியல் ஆய்விடங்கள், விலங்குகளின் எலும்புகள், எலும்புக் கருவிகள்.<br>• நிலவியல் அடுக்குகள், பாறைஓவியங்கள், கற்கருவிகள், கைவினைப் பொருட்கள் | 2 |
| 22 | • வட இந்தியாவின் இரும்புக்காலமானது ஓவியம் தீட்டப்பட்ட சாம்பல் நிற மட்பாண்டத்தோடு ஒத்துப்போகிறது.<br>• பொ.ஆ.மு1100 முதல் பொ.ஆ.மு 800 வரை இப்பண்பாட்டின் காலமாக கருதப்படுகிறது.<br>• அதிக அளவில் கங்கை யமுனை சமவெளிகளில் காணப்படுகின்றன.<br>• தென்னிந்தியாவில் இரும்புக்காலம் ஈமச்சின்னங்களுடன் கூடிய பெருங்கற்காலப் பண்பாடாக உள்ளது.<br>• இம்மண்பாண்டங்கள் தொடக்கக் கால அரசியல் உருவாக்க காலத்தைச் சார்ந்தவை. | 2 |
| 23 | • சமணத்தின் மையமான தத்துவம் அஹிம்சை<br>• சமணம் வலியுறுத்திய அளவுக்கு அஹிம்சையை வேறு எந்த மதமும் வலியுறுத்தவில்லை.<br>• கடவுளை வழிபடுவதாலோ வேள்விகள் செய்வதாலோ முக்தி பெற முடியாது.<br>• எளிமையான ஒழுக்கமிக்க வாழ்க்கையை மேற்கொள்வதன் மூலமாகவே ஒருவர் துன்பங்களிலிருந்து தப்ப முடியும் என்று சமணம் வலியுறுத்தியது. | 2 |
| 24 | • யவன என்ற சொல் பாரசீக மொழியில் கிரேக்கர்களைக் குறிக்கும். இது யயுனா என்னும் சொல்லிருந்து பெறப்பட்டதாகும்.<br>• இச்சொல் கலப்பின மக்கள் உட்பட கிரேக்கத்தை பிறப்பிடமாக கொண்ட அனைவரையும் குறிக்கும்.<br>• கண்கள் சாம்பல் அல்லது நீலநிறத்தில் இருந்ததால் வன்கண் யவனர் என சுட்டப்பட்டுள்ளனர். | 2 |
| 25 | • மதுபன் செப்புப் பட்டயங்கள்,<br>• சோன்பட் செப்பு முத்திரைக் குறிப்புகள்<br>• பான்ஸ்கெரா செப்புப்பட்டயக் குறிப்புகள்<br>• நாளந்தா களிமண் முத்திரை கல்வெட்டு<br>• ஐஹோலே கல்வெட்டு | 2 |

www.Padasalai.Net



Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

| | | |
|---|---|---|
| 26 | • மூன்றாம் நந்திவர்மன் மேலைக்கங்கர், சோழர் ஆகியோர் ஆதரவோடு பாண்டியரை திருப்புறம்பியம் போரில் தோற்கடித்தார்.<br>• மூன்றாம் நந்திவர்மனின் பேரனான அபராஜிதன் தொண்டை மண்டல பகுதியின் மீது படையெடுத்து வந்து ஆதித்த சோழனோடு போர் புரிந்து மடிந்தான்.<br>• பாண்டிய மன்னன் இரண்டாம் வரகுணனும் இப்போரில் தோல்வியுற்றார்.<br>• இப்போருக்குபின் தொண்டை மண்டலம் சோழர்களின் கட்டுப்பாட்டின் கீழ் வந்தது. | **2** |
| 27 | • முடிகொண்ட சோழன்<br>• கங்கை கொண்டான்<br>• கடாரம் கொண்டான்<br>• பண்டிதசோழன் | 2 |
| 28 | • வடஇந்தியாவில் புனிதத் தலங்களுக்கு சென்று வந்த அவர் வைணவத்தை போதித்தார்.<br>• வைணவத்தில் முற்போக்கான மாற்றங்களை அறிமுகப்படுத்தினார்<br>• கடவுளின் முன் அனைவரும் சமம் என்ற கொள்கையை போதித்தார்.<br>• சாதி முறையை நிராகரித்தார்.<br>• சமூகத்தில் அடித்தளத்தைச் சேர்ந்த மக்கள் இவரைப் பின்பற்றினர். | 2 |
| 29 | **மாகாணம்**: கிழக்கிந்திய கம்பெனியின் தலைமை அதிகாரியின் அலுவலகம் அமையப் பெற்றிருக்கும் இடம் மாகாணம் ஆகும்.<br>எ.கா. சென்னை, பம்பாய், கல்கத்தா.<br>**மாநிலம்**: மாகாணங்களை நிர்வகிப்பதில் ஏற்பட்ட சிரமத்தால் உருவாக்கப்பட்ட பிராந்தியங்கள் மாநிலங்கள் எனப்பட்டன.<br>எ.கா. ஐக்கிய மாகாணம், மத்திய மாகாணம். | 2 |
| 30 | • கிருஷ்ணதேவராயர் ஆட்சியில் எட்டு சிறந்த தெலுங்கு கவிஞர்கள் அவரது அவையை அலங்கரித்தனர்.<br>• அவர்கள் அஷ்டதிக்கஜங்கள் என்று அழைக்கப்பட்டனர்.<br>• அவர்கள் முறையே அல்லசாணி பெத்தண்ணா, நந்தி திம்மண்ணா, தெனாலிராமன், துர்ஜதி, பட்டு மூர்த்தி, புணவீரபத்ரன், மல்லானா மற்றும் பனாஜி சூரணா. | 2 |

www.Padasalai.Net



Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

## பகுதி - III

**எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும்.**
**வினா எண் 40 - க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.** **7×3 = 21**

| வினா எண் | விடைகள் (எவையேனும் 3 குறிப்புகளுக்கு 3 மதிப்பெண்கள் வழங்கவும்) | |
|---|---|---|
| 31 | • கருவிகள் சிறியதாயின.<br>• கோடாரியை பயன்படுத்தும் வழக்கம் குறைந்தது.<br>• கற்கருவிகள் உற்பத்தியில் மூலக்கல்லை தயார் செய்யும் தொழில்நுட்பத்தை பயன்படுத்தினர்.<br>• செர்ட், ஜாஸ்பர், கால்சிடெனி, குவார்ட்ஸ் கற்களை மூலப்பொருள்களாகப் பயன்படுத்தினர். | 3 |
| 32 | • காடுகளை திருத்துவதில் இரும்பு முக்கியப் பங்காற்றியது.<br>• கங்கைச் சமவெளியின் வளம் செறிந்த மண்ணும், இரும்புக் கொழுமுனைகளின் பயன்பாடும் வேளாண் உற்பத்தியை மேம்படுத்தின.<br>• பாசன வசதிகளுடன் இரும்புக் கோடாரிகளும், இரும்புக்கலப்பைகளும் வேளாண் உற்பத்தியை அதிகரித்தன.<br>• கங்கை வடிநீர் பகுதியில் நிலப்பரப்பு வெகுவாக விரிவடைய இரும்புக் கோடாரிகளும், இரும்புக்கலப்பைகளும் காரணமாகும். | 3 |
| 33 | • அசோகர் ஆட்சிக்காலத்தில் எட்டாவது ஆண்டில் கலிங்கப்போர் நடைபெற்றது.<br>• இப்போர் மகதப்பேரரசிலிருந்து பிரிந்து சென்ற கலிங்கத்தை தண்டிப்பதற்காக தொடுக்கப்பட்ட போர்.<br>• மௌரியர்கள் அதிகாரப் பூர்வமாக பதிவு செய்த படையெடுப்பு ஆகும்.<br>• போரில் கொல்லப்பட்டவர்கள், படுகாயம் அடைந்தவர்கள் எண்ணிக்கையில் பல பத்தாயிரங்கள் ஆகும்.<br>• போரின் துன்பங்களால் நெகிழ்ந்த அசோகர் பௌத்த மதத்திற்கு மாறினார். | 3 |
| 34 | • இளஞ்சேட்சென்னியின் மகனான கரிகாலனுடைய ஆட்சியைப் பற்றிபட்டினப்பாலை விவரிக்கிறது<br>• சங்ககால சோழர்களில் தலை சிறந்த மன்னன் கரிகாலன் ஆவார்.<br>• வெண்ணிப் போர்க்களத்தில் சேரர், பாண்டியர் மற்றும் பதினோரு வேளிர்களை முறியடித்தார்.<br>• காட்டை வெட்டி நாடாக்கினார்.<br>• காவிரியின் குறுக்கே கல்லணையைக் கட்டினார்.<br>• குளம், வாய்க்கால் போன்ற நீர்ப்பாசன வசதிகளை ஏற்படுத்தி வேளாண்மையை வளரச் செய்தார். | 3 |

www.Padasalai.Net



Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

| | | |
|---|---|---|
| 35 | • குப்த பேரரசு தேசம் அல்லது புக்தி எனப்படும் மாநிலங்களாக பிரிக்கப்பட்டது.<br>• மாநிலங்கள் விஷ்யா எனப்படும் மாவட்டங்களாக பிரிக்கப்பட்டன.<br>• மாவட்டத்திற்கு கீழ் விதி, பூமி, பதகா, பீடா என்று பல்வேறு விதமான நிர்வாக அலகுகள் இருந்தன.<br>• கிராம நிர்வாகத்தை கிராமிகா, கிராம அத்யக்ஷா போன்ற அதிகாரிகள் நிர்வகித்தனர். | 3 |
| 36 | • செல்வக்களஞ்சியமாக இருந்த இந்துக் கோவில்களை கொள்ளையடிப்பதே முதன்மை நோக்கமாகும்.<br>• இந்துக் கோவில்களை இடிப்பதும், சிலைகளை தகர்ப்பதும் அவரது நோக்கமாகும்.<br>• பெரும் படையை பராமரிக்கிற செலவை ஈடு செய்யும் தேவை ஏற்பட்டது.<br>• ஏனெனில் துருக்கிய படை என்பது நிரந்தரமான தொழில்நேர்த்தி பெற்றதாகும். | 3 |
| 37 | • இறை, காணிக்கடன், இறைக்கட்டினகாணிக்கடன், கடமை, குடிமை உள்ளிட்ட வரிகள் வசூலிக்கப்பட்டன.<br>• அரசரும் உள்ளூர் தலைவர்களும் ஒப்படி என்ற வரியை வசூலித்தனர்.<br>• விளை பொருளாக செலுத்தப்பட்ட வரி இறைக்கட்டின நெல்லு எனப்பட்டது.<br>• பாசன குளங்களை பழுதுபார்க்க ஏரி ஆயம் எனும் வரி வசூலிக்கப்பட்டது. | 3 |
| 38 | • போர்ச்சுகீசிய குடியேற்றங்கள் – கோவா, டாமன், ஹீக்ளி<br>• டச்சுக் குடியேற்றங்கள் – புலிக்காட், காரைக்கால், மசூலிப்பட்டினம்<br>• டேனிஷ் குடியேற்றங்கள் – தரங்கம்பாடி, செராம்பூர்<br>• பிரஞ்சு குடியேற்றங்கள் – சூரத், புதுச்சேரி, மாஹி, ஏனம்<br>• ஆங்கில குடியேற்றங்கள் – சூரத், சென்னை பம்பாய், கல்கத்தா. | 3 |
| 39 | • பிரார்த்தனை சமாஜ அமைப்பிற்கு வலுசேர்த்தவர்களுள் எம்.ஜி.ரானடேவும் ஒருவராவார்.<br>• இவரது முயற்சியால் தேசிய சமூக மாநாடு உருவாக்கப்பட்டது.<br>• விதவை மறுமணச் சங்கம் அமைப்பை உருவாக்க ஒத்துழைத்தார்.<br>• தக்காணக் கல்விக்கழகம் என்னும் அமைப்பை முன்னெடுத்துச் சென்றார். | 3 |

www.Padasalai.Net



Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

| | | |
|---|---|---|
| 40 | • 1822ஆம் ஆண்டில் சர்தாமஸ் மன்றோ இரயத்துவாரி முறையை சென்னையில் அறிமுகப்படுத்தினார்.<br>• "ரயத்" என்றால் உழவர் என்பது பொருள்.<br>• எந்த இடைத்தரகரும் இல்லாமல் அரசே நேரிடையாக பயிரிடுவோருடன் தொடர்பு கொள்ளும்.<br>• நிலவரி செலுத்தும் வரை, வரி செலுத்துவோரின் வசமே நிலம் இருந்தது.<br>• இரயத்துவாரி முறை நிலத்தின் தனித்தன்மையை அறிமுகப்படுத்தியது. | 3 |

பகுதி - IV 7×5 = 35

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.**

| வினா எண் | விடைகள் (ஏதேனும் 5 குறிப்புகளுக்கு 5 மதிப்பெண்கள் அளிக்கவும்) | |
|---|---|---|
| 41 (அ) | • காஷ்மீர் பகுதியில் நிலவிய புதிய கற்காலப் பண்பாடும், ஹரப்பா நாகரிகமும் ஒரே சமகாலத்தவையாகும்.<br>• பர்சஹோம் இக்காலக் கட்டத்தின் முக்கியமான ஆய்வு மையமாகும்.<br>• குளிரிலிருந்து காத்துக்கொள்ள இம்மக்கள் 4 அடி கொண்ட குழி வீடுகளில் வசித்தனர்.<br>• புதிய கற்காலத்தில் செம்மறி ஆடு, வெள்ளாடு ஆகியன வளர்ப்பு விலங்குகளாக இருந்தன.<br>• பர்சஹோமைச் சேர்ந்த மக்கள் ஹரப்பா மக்களோடு புதிய கற்காலத்தில் வாணிபத்தில் ஈடுபட்டனர்.<br>• கையால் வனைந்த மட்பாண்டங்களையும், எலும்பிலான கருவிகளையும் பயன்படுத்தினர்.<br>• செராமிக், செராமிக் அல்லாத என இருகட்டங்கள் இங்கு அடையாளம் காணப்பட்டுள்ளன. | 5 |
| | **(அல்லது)** | |
| 41 (ஆ) | • நாட்டின் நிர்வாகத்தின் தலைவர் அரசர் ஆவார்.<br>• அமைச்சரவை , மதகுரு ஆகியோர் அரசருக்கு நிர்வாகத்தில் உதவி செய்தனர்.<br>• தலைநகர் பாடலிபுத்திரம் நேரடியாக நிர்வகிக்கப்பட்டது.<br>• சுவர்ணகிரி , உஜ்ஜையினி, தட்சசீலம், தோசாலி என மாகாணங்களாக நிர்வாகம் பிரிக்கப்படுகின்றது.<br>• மாவட்ட நிர்வாகம் ஸ்தானிகர் என்பவர் கட்டுப்பாட்டில் இருந்தது.<br>• நகர நிர்வாகம் நகரிகா என்பவரின் கட்டுப்பாட்டில் இருந்தது.<br>• 5 முதல் 10 கிராமங்களுக்கு கோபா என்ற அதிகாரிகள் பொறுப்பாக இருந்தனர்.<br>• கிராம நிர்வாகம் கிராமணி என்பவரால் நிர்வகிக்கப்பட்டது. | 5 |

www.Padasalai.Net



Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

| | | |
|---|---|---|
| 42 (அ) | • இரும்புக் காலக்கட்டத்தில் தோன்றிய தலைவர்களிலிருந்து தொடக்க வரலாற்றுக் கால வேந்தர்கள் உருவாயினர்.<br>• கிழார்களையும், வேளிர்களையும் அடிபணிய செய்ததோடு தங்களுக்குள்ளும் போரிட்டுக் கொண்டனர்.<br>• போருக்காக படைவீரர்களை அணிதிரட்டியதோடு, சில வேளிர் குலத் தலைவர்களின் உதவியையும் பெற்றனர்.<br>• சங்க காலத்தைச் சேர்ந்த வேந்தர்கள் தங்களது வலிமையை பறைசாற்றிக் கொள்வதற்காக சிறப்புப் பட்டங்களை சூட்டிக் கொண்டனர்.<br>• கடுங்கோ, இமயவரம்பன், வானவரம்பன், பெருவழுதி போன்ற பட்டப்பெயர்களை சூட்டிக் கொண்டு ஏனைய வேளிர்களிடமிருந்து தங்களை வேறுபடுத்திக் கொண்டனர்.<br>• புலவர்களையும், கலைஞர்களையும் ஆதரித்தனர்.<br>• தங்களையும், தங்கள் நாட்டையும் புகழ்ந்து பாடுவதற்காக புலவர்கள் வேந்தர்களால் ஆதரிக்கப்பட்டனர். | 5 |
| | **(அல்லது)** | |
| 42 (ஆ) | • பௌத்த மதக் கொள்கைகள் இந்து சமூகத்தில் ஆழமாக ஊடுருவி இருந்ததை யுவான்சுவாங் உற்று நோக்கி பதிவு செய்துள்ளார்.<br>• மதுராவில் மக்கள் தொகை அதிகம். அவர்கள் மகிழ்ச்சியாக இருந்தனர்.<br>• சூழலைப் பொருத்து குற்றவாளிகளுக்கு மிதமாகவோ, கடுமையாகவோ அபராதம் விதிக்கப்பட்டது.<br>• மக்களுக்கு முழுமையான வழிபாட்டுச் சுதந்திரம் வழங்கப்பட்டிருந்தது என அவர் குறிப்பிடுகிறார்.<br>• யுவான்சுவாங்கின் கூற்றுப்படி இந்துக்களுக்கான சமுதாயத்தின் நான்கு பிரிவுகளுக்கான தொழில்கள் முற்காலத்தில் இருந்தது போலவே தொடர்ந்தன.<br>• சாதி அமைப்பு இறுக்கமாகக் காணப்பட்ட போதிலும் சமுதாயத்தின் பல்வேறு பிரிவினர் மத்தியில் மோதல்கள் எதுவும் நிகழவில்லை.<br>• இந்தியர்கள் பெரும்பாலும் மரக்கறி உணவுப் பழக்கத்தை கொண்டிருந்ததாகவே யுவான்சுவாங் குறிப்பிடுகிறார்.<br>• சமஸ்கிருதமே கற்றறிந்தோரின் மொழியாக இருந்தது. கல்வி கற்கும் வயது 9 முதல் 30 வயது வரையாக இருந்தது. | 5 |

www.Padasalai.Net



Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

| | | |
|---|---|---|
| 43 (அ) | • 1191ல் நடைபெற்ற முதல் தரெய்ன் போரில் முகமது கோரி தோற்கடிக்கப்பட்டார்.<br>• 1192ல் முகமதுகோரி மீண்டும் இரண்டாவது முறையாக அஜ்மீர் மீது படையெடுத்தார்.<br>• பிருத்திவிராஜ்சௌஹான் கோரியின் ஆற்றலை குறைத்து மதிப்பிட்டார்.<br>• 1192ல் நடைபெற்ற இரண்டாம் தரெய்ன்போரில் முகமது கோரி பிருத்திவிராஜ் சௌஹானை தோற்கடித்தார்.<br>• போரில் வெற்றி பெற்ற கோரி ராஜதுரோக குற்றம் சாட்டி பிருத்திவிராஜ் சௌஹானை கொன்றார்.<br>• இந்திய வரலாற்றின் திருப்புமுனைகளுள் ஒன்றாக இப்போர் அமைந்தது.<br>• மேலும், இந்தியாவில் சுல்தானியம் ஆட்சியமைய வழிவகுத்தது.<br>• இந்தியாவில் தான் கைப்பற்றிய பகுதிகளுக்கு குத்புதின் ஐபக்கை துணை ஆட்சியாளராக நியமித்தார். | 5 |
| (அல்லது) | | |
| 43 (ஆ) | • சோழநாடு வேளாண்மை மூலம் அதிக வருவாய் ஈட்டியதால் நீர் ஆதாரங்களை நிர்வகிப்பதில் அதிக கவனம் செலுத்தினர்.<br>• மழை நீரை சேமித்து வைக்க வடி, வாய்க்கால் என்ற கால்வாய்கள் இருந்தன.<br>• வடி என்பது வடக்கு தெற்காக நீர் ஓடுவதையும், வாய்க்கால் என்பது கிழக்கு மேற்காக நீர் ஓடுவதையும் குறிக்கிறது.<br>• இந்த அமைப்பு முறை அனைத்து நிலங்களுக்கும் சீராக நீர் செல்வதற்கு உதவியது.<br>• ஏரிகள் மற்றும் கிணறுகளின் பாசனத்திற்காக நீர் சேமிக்கப்பட்டது.<br>• கால்வாய்களை ஆழப்படுத்துதல், அகலப்படுத்துதல், பாசன அமைப்பை பழுதுபார்த்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டன.<br>• பாசன குளங்களை பழுதுபார்க்க ஏரி ஆயம் என்ற வரி கிராம சபையால் வசூலிக்கப்பட்டது. | 5 |
| 44 (அ) | • கன்னட, தெலுங்கு போர் மரபுச் சமூகங்களைச் சேர்ந்தோர் தமிழகப் பகுதிகளில் குடியேறினர்.<br>• பெருவாரியான மக்கள் வறுமையில் வாடினர். அடிமை முறை நிலவியது.<br>• மக்களின் மீது வரிவிதிப்பதன் மூலமே அரசு வருமானத்தை பெற்றது.<br>• சமூகத்தில் உலோகவேலை செய்பவர்கள், கைவினைஞர்கள், கட்டிட கலைஞர்கள் முக்கியத்துவம் பெற்றனர்.<br>• வேளாண் சாராத கைவினை தொழில் புரிபவர்கள் பட்டடை அல்லது காஸயவர்க்கம் எனப்பட்டனர்.<br>• தமிழகத்தில் வடபகுதி, ராயலசீமை, ஆந்திரக் கடற்கரைப் பகுதிகளில் பெருமளவில் வணிக மையங்களும், நெசவு மையங்களும் உருவாகின.<br>• தென்னிந்தியாவின் துறைமுகங்களில் ஐவுளி, ஏற்றுமதி செய்யப்பட்ட பண்டங்களில் முக்கியமான பண்டமாக விளங்கியது. | 5 |

www.Padasalai.Net



Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

| (அல்லது) | | |
|---|---|---|
| 44 (ஆ) | • கூண்டு வடிவிலான குமிழ்களை கொண்ட கவிதை மாடங்களாலும், ஒப்பனைகள் மிகுந்த கலங்கரை விளக்கம் போன்ற கோபுரங்களாலும் ஸ்தூபிகள், மாடங்கள் கட்டப்பட்டன.<br>• பாரசீக கட்டிடக்கலை வல்லுநர்களால் வடிவமைக்கப்பட்டு இந்தியக் கலைஞர்களால் உமாயூன் கல்லறை கட்டப்பட்டது.<br>• ஆக்ரா கோட்டை, மணற் கற்பாறைகளால் இரஜபுத்திர பாணிகளை இணைத்து கட்டப்பட்டது.<br>• ஆக்ரா கோட்டையிலிருக்கும் மோதி மசூதி முழுவதும் பளிங்கு கற்களால் ஆனது.<br>• தாஜ்மஹால் முழுவதும் பளிங்கு கற்களால் உயர்த்தப்பட்ட தளத்தின் மீது கட்டப்பட்டது.<br>• ஷாஜகான், ஷாஜஹானாபாத் என்ற பெயரில் ஒரு நகரத்தையே உருவாக்கினார். இங்கு தான் செங்கோட்டையும், ஜூம்மா மசூதியும் அமைந்துள்ளன.<br>• திவானி ஆம், திவானி காஸ், மோதி மஹால் போன்ற பிரம்மிப்பூட்டும் கட்டிடங்களால் செங்கோட்டை கட்டப்பட்டுள்ளது. | 5 |
| 45 (அ) | • முதலாம் பாஜிராவின் தந்தை பாலாஜி விஸ்வாநத்.<br>• இவரே மராட்டியத்தின் முதல் பேஷ்வா.<br>• ஹைதராபாத் நிஜாம், மால்வா ஆளுநர், குஜராத் ஆளுநர் ஆகியோரை வீழ்த்தினார்.<br>• மராத்திய சாம்ராஜ்யத்தின் அதிகாரத்தை மேம்படுத்தினார்.<br>• முகலாயரின் கட்டுப்பாட்டில் இருந்த பண்டேல்கண்டை விடுவித்தார்.<br>• பண்டேல்கண்டின் ஆட்சியாளரிடமிருந்து மூன்றில் ஒரு பங்கு பகுதியினை பெற்றார்.<br>• பேஷ்வாவிற்கும் சிம்ம சொப்பனமாக விளங்கிய தலைமைத் தளபதி திரிம்பக்ராவை தோற்கடித்தார்.<br>• தபாய் போருக்கு பின்தலைமைத் தளபதியின் பதவியையும், பேஷ்வா ஏற்றுக் கொண்டார்.<br>• போர்த்துகீசியர்களிடமிருந்து தானே, சால்செட், பேசின் ஆகிய பகுதிகளை கைப்பற்றினார்.<br>• போர்த்துகீசியர்கள் கொங்கணக் கடற்கரை தேசத்தில் இருந்து விரட்டியடிக்கப்பட்டனர். | 5 |
| (அல்லது) | | |

www.Padasalai.Net




Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

| | | |
|---|---|---|
| 45 (ஆ) | **சூழ்நிலைகள்**<br>• வேளாண் நிலத்தை விரிவுபடுத்தும் முயற்சி மேற்கொள்ளப்பட்டு அதற்காக காடுகள் அழிக்கப்பட்டன.<br>• இதற்காக ஜங்கிள் மஹால் காடுகளிலிருந்து ஜமீன்கள் உருவாக்கப்பட்டு ஏலம் விடப்பட்டன.<br>• காபித் தோட்டங்களுக்காகவும், இருப்புப் பாதை அமைக்கவும் காடுகள் வெகுவாக அழிக்கப்பட்டன.<br>• இக்காடுகளில் வசித்த பழங்குடியினர் இதனை எதிர்த்ததால் காடுகளின் வளங்களை மேலாண்மை செய்ய வனச்சட்டம் இயற்றப்பட்டது.<br>**விளைவுகள்**<br>• இச்சட்டம் காடுகளின் வளங்களைப் பூர்வீக குடிகள் பயன்படுத்தத் தடை விதித்ததால் அவர்களின் அதிருப்தியை பெற்றது.<br>• பூர்வீக குடிகளின் எதிர்ப்பை கட்டுக்குள் கொண்டுவரும் விதமாக குற்றப்பழங்குடியினர் சட்டம் **1871**ல் இயற்றப்பட்டது.<br>• வனச்சட்டங்கள் பழங்குடியினரை காலனி அரசுக்கு எதிராக கிளர்ந்தெழச் செய்தன. | 5 |
| 46 (அ) | • அரசு ஆதரவை சமணம் இழந்தது.<br>• திகம்பரர், ஸ்வேதம்பரர் என பிளவு ஏற்பட்டு சமணத்தை மிகவும் பலவீனப்படுத்தியது.<br>• ஒரு மத இயக்கமாகச் செயலாற்றும் துடிப்பை காலப்போக்கில் சமணம் இழந்தது.<br>• குழு மனநிலை சமணத்தைப் பலவீனப்படுத்தியது.<br>• சமண மத நடைமுறைகளின் கடுமையும் அதன் வீழ்ச்சிக்கு காரணமாக அமைந்தது.<br>• ஒரு போட்டி மதப்பிரிவாக பௌத்தம் பரவி சமணத்தைப் பின்னுக்குத் தள்ளியது. | 5 |
| | **(அல்லது)** | |

www.Padasalai.Net



Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

| | | |
|---|---|---|
| 46 (ஆ) |  | 5 |



Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

<table>
<tr><td>47<br>(அ)</td><td>முதலாம் பானிபட் போர்–1526<br>• பாபர் இப்ராகிம் லோடிக்கு எதிராக பீரங்கி படையை திறம்படப் பயன்படுத்தியமை பாபரின் வெற்றிக்கு காரணங்களாய் அமைந்தன.<br>• இவ்வெற்றி இந்தியாவில் நிரந்தரமாகத் தங்குவதற்கான நம்பிக்கையை பாபருக்கு அளித்தது.<br>கான்வாப் போர்–1527<br>• சித்தூரின் ராணா சங்காவை போர்க்களத்தில் எதிர்கொள்ளத் தீர்மானித்தார்.<br>• பாபர் ராணா சங்காவின் படைகளைத் தோற்கடித்தார்.<br>• இது பாபரின் நிலைக்கு மேலும் வலுவூட்டியது.<br>சந்தேரிப்போர்–1528<br>• சந்தேரியில் மேதினிராய் என்பவருக்கு எதிராகச் செய்யப்பட்ட போராகும்.<br>• சிறப்பு வாய்ந்த மாளவப் பகுதியின் மீது பாபரின் மேலாதிக்கத்தை உறுதி செய்தது.<br>காக்ராப் போர்–1529<br>• ஆப்கானியர்களுக்கு எதிராக பாபர் மேற்கொண்ட இறுதிபோர் இதுவாகும்.<br>• கங்கை நதியின் துணை நதியான காக்ரா ஆற்றின் கரையில் இறுதியாக நடைபெற்ற போரில் பாபர் ஆப்கானியரைத் தோற்கடித்தார்.</td><td>5</td></tr>
<tr><td colspan="3" align="center">(அல்லது)</td></tr>
<tr><td>47<br>(ஆ)</td><td>காலக்கோடு சிவாஜி– (1627–1680)<br>• 1627– சிவாஜியின் பிறப்பு<br>• 1646– சிவாஜி தோர்ணா கோட்டை கைப்பற்றுதல்<br>• 1647– தாதாஜி கொண்ட தேவ் மறைவு<br>• 1649– ஷாஜி விடுதலை<br>• 1656– சிவாஜி இராணுவச் செயல்பாடுகளில் ஈடுபட்டார்.<br>• 1659– சிவாஜி மீது அப்சல்கான் தாக்குதல்.<br>• 1660– செயிஷ்டகான் மீது சிவாஜி தாக்குதல் நடத்தினார்.<br>• 1664– சிவாஜி சூரத்நகரைத் தாக்குதல்<br>• 1665– புரந்தர் உடன்படிக்கை<br>• 1666– சிவாஜி ஆக்ரா பயணம்<br>• 1669– ஜாட் கலகம்.<br>• 1670– சிவாஜி சூரத்நகரைத் தாக்குதல்<br>• 1672– சௌத் (வரி) கப்பம் பெறுதல்.<br>• 1674– சிவாஜி முடிசூட்டப்படுதல்<br>• 1676– சிவாஜி தக்காணம் மீது போர் தொடுத்தார்.<br>• 1680– சிவாஜியின் இறப்பு</td><td>5</td></tr>
</table>

www.Padasalai.Net



Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com